தலைப்பு 274 - அனுராதபும் மாவட்ட செயலகம்

…………………………………………………

1. நிதிக்கூற்றுக்கள்

……………………………

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

…………………………………

அனுராதபும் மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அனுராதபும் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அனுராதபும் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நிதி கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுராதபும் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

……………………………………………………

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு த்தியோகத்தரின் பொறுப்பு

....................................................................................................................................

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.
2018 தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

..........................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

..............................................................................

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற் கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

............................................................

1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியிருக்காமை

.....................................................................................................................

2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021∴3 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் தேவைப்பாடுகளை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ........................ | ................................ | .............. |
| ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 416,189,549 தொகையான பெறுமதி ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கின் பெறுவனவுகளாக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | நிதி செயலாற்றல் கூற்றிற்கு ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தவர்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் உள்ளடக்கப்படவில்லையாயின் நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்கல் செய்ய முடியாதிருக்கும். | அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரித்துக்கொள்ளப்பட்ட வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும். |

1.6.2 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

.........................................

(அ) ஏடுகளும் புத்தகங்களும் பேணப்படாதிருத்தல்

....................................................................

| அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ........................ | ................................ | .............. |
| 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 2021∴02 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 03.9 ஆம் | மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களின் நிதியற்ற சொத்துக்களுக்குறிய மீதிப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு சொத்துக்கும் தனித்தனியாக இனங்காணக்கூடிய |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் நிதிகூற்றுக்களில் அடங்கியுள்ள நிதியற்ற சொத்துக்கள் மீதான கூற்றின் ரூபா 4,086,325,892 தொகைக்குரிய சொத்துக்கள் தொடர்பாக திணைக்கள ஏடுகளில் ஒவ்வொரு சொத்துக்களின் மீதிப் பட்டியல் அல்லது சொத்துக்களை இனங்காணக் கூடிய சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வகையில் சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

……………………………………………………………………………………

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ........................... | ............. ரூபா ........ | ....... | ........................... | ..................... |
| (ஊ) | 2009 இன் 22 ஆம் இலக்க வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 9(அ)(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | | தேசிய பாதுகாக்கப்பட்ட காணிக்கான எல்லையிலிருந்து 01 மைலுக்குள் செய்யப்படுகின்ற அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குமாக வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் | கோமாரிகா பயிர்ச் செய்கை செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக உரிய கம்பனிக்கு எதுவித அனுமதியும் வழங்கப்படவில்லை. பாதுகாப்பு வலயத்திற்குள் | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமில்லாது வில்பத்து பாதுகாப்பு நிலத்தின் எல்லையின் ஒரு மைலுக்கு உள்ளே (பாதுகாப்பு வலயத்திற்குள்) அமைந்துள்ள காணிகளில் ஒரு தனியார் கம்பனியால் கோமாரிகா பயிர்ச் செய்கை செயற்திட்டமும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இச்செயற்திட்டத்திற்காக தேசிய சுற்றாடல் பரீட்சிப்பின் மூலம் சுற்றாடல் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பயிர்ச் செய்கை நடவடிக்கைகளானது கம்பனிக்கும் காணி உரிமையாளருக்கும் இடையிலான இணக்கப்படாட்டின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஸை) | காணி ஆணையாளர் நாயகத்தின் 2008.˙.04 ஆம் இலக்க 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய சுற்றறிக்கை | | 04 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியிருந்த பல்வேறு பாதுகாக்கப்பட்ட மற்றும் அரசாங்க காணிகளை அதிகாரமின்றி கைப்பற்றுவதனை கட்டுப்படுத்துவதற்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படுவதனை உள்ளடக்கி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றது. | காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஸைை) | சனாதிபதி செயலாளரின் ளூ.ீ.ஊஆனு.˙.06.˙.2015 ஆம் இலக்க 2015 யூன் 16 ஆந் திகதிய அரசாங்க நிறுவனங்களால் பின்பற்ற வேண்டிய மின்வலு பாதுகாப்பு நடைமுறை என்ற தலைப்பிலான சுற்றறிக்கை | 4,198,198 | அரசாங்க நிறுவனங்களில் வாயு சீராக்கி இயந்திரங்களை பொருத்தும் போது மின்வலுவை பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்யும் ஐஎெநசவநச உடனான வாயு சீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்து பொருத்த வேண்டிய போதிலும் 3 சந்தர்ப்பங்களின் போது மாவட்ட செயலகத்திற்கும் 2 பிரதேச செயலகங்களுக்கும் பொருத்துவதற்காக | ஐஎெநசவநச உடனான வாயு சீராக்கி இயந்திரங்களுக்கு சந்தையில் அதிகவிலை காணப்படுவதனாலும் சந்தையில் தட்டுப்பாடு உள்ளதனாலும் ஐைெநசவநச இல்லாத வாயு சீராக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | மின்வலுவைப் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்யும் உடனான வாய சீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்தல் வேண்டும். |

கொள்வனவு செய்யப்பட்ட 27 வாயுசீராக்கி இயந்திரங்கள் ஐளெநசவநச இல்லாத வாயு சீராக்கி இயந்திரங்களாகும்
.

2. நிதி மீளாய்வு

.....................

2.1 செலவு முகாமைத்துவம்

..................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .................................. | ........................ | .................. |
| (அ) | வருடாந்த மதிப்பீட்டிலிருந்து நிதி ஏற்பாடு செய்யப்படாத 02 செலவு விடயங்களுக்காக ரூபா 275,000,000 பணம் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் 81 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவானவை பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | நெல் கொள்வனவு செய்வதற்கும் சேதனப் பசளை செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கும் இந்நிதி ஏற்பாடு பின்னர் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்ததுடன் போதியளவு நெல் இருப்பு இல்லாததனாலும் சேதனப் பசளைதயாரிப்பதற்கு விவசாயிகள் ஆர்வம் இல்லாததனாலும் இச்செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் போதியளவில் இடம் பெற்றிருக்கவில்லை. | நிதி ஏற்பாட்டினை வழங்கும் போது அமுல்ப்படுத்தக்கூடிய செயற்திட்டங்கள் தொடர்பாக சிறந்த ஆய்வினை மேற்கொண்டு நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 05 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 519,000,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 322,991,490 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது ஒவ்வொரு செலவு விடயத்தின் தேறிய நிதி ஏற்பாட்டில் 38 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சுடையாக இருந்தது. | கொவிட் நிலைமையின் காரணமாக செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாமை மற்றும் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு கிடைக்காமை. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினை முடியுமான அளவில் முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு கவனித்துக்கொள்ளுதல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

...................................

3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

....................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ..................................... | ......................... | .......................... |
| (அ) | பிரதேச செயலகப் பிரிவில் குடியிருக்கின்ற மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு காணி இல்லாத நபர்களுக்காக காணிகளை வழங்குவதற்கும் தற்பொழுது காணிகளை வைத்துள்ள எனினும் சட்ட ரீதியாக உரிமை இல்லாத நபர்களுக்காக முறையான அதிகாரப் பத்திரங்களை வழங்குவதற்கும் காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆந் | கொவிட் நிலைமையின் காரணமாக நடாத்துவதற்கு முடியாதிருந்த காணிக் கச்சேரிகளை எதிர்காலத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய 2008.˙.04 ஆம் இலக்க காணி முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்கான சுற்றிக்கையின் பிரகாரம் பிரதேச செயலலாளரால் காணிக் கச்சேரியினை நடாத்தி காணிகள் சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 22 பிரதேச செயலகப் பிரிவுகளின் 632 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 128 காணிக் கச்சேரிகள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | | |
| (ஆ) | மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவில் நீண்ட கால (வணிக) உத்தரவுப் பத்திரங்களை வைத்திருக்கும் மூன்று குத்தகைக்காரர்களின் குத்தகை உத்தரவுப் பத்திர காலம் முடிவடைந்து 2 ஆண்டுகளை மிகைத்திருந்தும் புதிய மதிப்பீட்டிற்கு இணங்க குத்தகை காலத்தை நீடிக்காமையின் காரணமாக அக்காணிகளிலிருந்து குத்தகையை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட உடன் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குத்தகை காலம் முடிவடைந்ததன் பின்னர் குத்தகையை புதுப்பித்து புதிய மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகையை அறவீடு செய்வதற்குநடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 பிரதான செயற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகள்

..........................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ..................................... | .......................... | ........................... |
| இராஜாங்கனை பிரதேச செயலகப் பிரிவில் இராஜாங்கனை தொகுதி 18 இன் 456 ஆம் இக்க கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் கீழ் குடியிருப்பு நடவடிக்கைகளுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ள காணிகள் வியாபார குறிக்கோளில் கோமாரிகா பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்காக ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் காணி உரிமையானது உரிய கம்பனியால் பெற்றுக்கொள்ளப்படும் ஆபத்திற்கு உட்பட்டிருந்தது. | பிரதேச மக்களுக்கும் உரிய கம்பனிக்குமிடையே பரஸ்பர புரிந்துணர்வில் கோமாரிகா பயிர்ச் செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. | காணி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் குடியிருப்பு மற்றும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள காணிகள் வணிக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுமாயின் உரிய காணிகளின் உரித்தினை மீளப்பெற்று நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்படுதல் வேண்டும். |

3.3 எதிர்பார்க்கின்ற பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்துகொள்ளாமை

.............................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................... | ......................... | .......................... |
| சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் ரூபா 196,909,215 தொகையான நிதி ஏற்பாட்டிலிருந்து 22 பிரதேச செயலகங்களில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த 34 செயற்திட்டங்கள் அங்கீகரித்த செயற்திட்ட அறிக்கையில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்படாமையின் காரணமாக ரூபா 94,455,778 தொகையான வேலைப்பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 33,605,796 பெறுமதியான செயற்பாடுகள் நிறைவேற்ற முடியாது காணப்பட்டன. | செயற்திட்டங்களுக்குத் தேவையான பொருட்களையும் ஏனையவைகளையும் வழங்குவதற்கு சந்தையில் பொருட்கள் தட்டுப்பாடாக இருந்தமை மற்றும் கொரோனா நிலைமையின் காரணமாக செயற்திட்டங்களை முழுமையாக அமுல்ப்படுத்த முடியாதிருந்தமை. | அங்கீகரித்த செயற்திட்ட அறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.4 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (ழுரவ உழஅந) பெற்றுக்கொள்ளப்படாமை

.............................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................... | ......................... | .......................... |
| 2016 மார்ச் 21 ஆந் திகதிய 1∴2018 ஆம் இலக்க கிராம சக்தி மக்கள் கம்பனியை தோற்றுவித்தல் என்ற தலைப்பிலான சுற்றறிக்கையின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்டத்தில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி | 2019 அரசாங்க மாற்றங்களுடன் கிராம சக்தி முயற்சியானது தடைப்பட்டதனால் இச்செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தடை உருவாகியமையும் கிராம சக்தி கம்பனிகளின் அங்கத்தவர்களின் ஆர்வம் | நலன்பெறுனர்களுக்கு உச்சளவு பயன்கிடைக்கும் வகையில் சுழற்சி நிதியத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் கடன் நிகழ்ச்சித் |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான நிதி ஏற்பாடு கம்பனிகளின் வங்கி கணக்கிற்கு வழங்கப்பட்டிருந்தும் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் தோற்றுவிக்கப்பட்டிருந்த 113 கிராம சக்தி மக்கள் கம்பனிகள் செயற்படாத நிலைமையில் காணப்பட்டன. அக்கம்பனிகளின் வங்கி கணக்குகளில் ரூபா 32,418,605 தொகையான காசு மீதி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது. | குறைவடைந்தமையும் காரணமாகும். | திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

3.5 பெறுகைகள்

...................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .......................................... | .......................... | ........................ |
| (அ) | யானை மனிதர்கள் சிக்கலினை குறைப்பதற்காக மின்சார வேலியை பராமரித்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை தொடர்பாக மின்சார வேலிகளுக்கு அண்மையில் 60 காவல் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக வன சீவராசிகள் திணைக்களத்தின் ரூபா 56,079,458 தொகையான நிதி ஏற்பாட்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட இச்செயற்திட்டத்தின் பெறுகை நடைமுறையின் போது | | |

இடம்பெற்ற குறைபாடுகள் பின்வருவனவாகும்.

| | | | |
|---|---|---|---|
| (ഥ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.10.1 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் கெள்வி ஆவணங்களிலுள்ள வரையரைகளின் அடிப்படையில் பெறுகைக்குரிய கேள்வி மனுக்களை மதிப்பீடு செய்யும் போது ஒப்பந்தத்தை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு உள்ள நிதி மற்றும் தொழில்நுட்ப இயலுமையும் முன் அனுபவமும் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு இடம் பெறாமையின் காரணமாக மிகவும் பொருத்தமான ஒரு ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்கு முடியாமையினால் எதிர்பார்த்த 60 காவல் நிலையங்களில் 15 நிலையங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. | சீ 4 தரப்படுத்தலின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்துள்ளதனால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இயலுமை உள்ளது என முடிவு எடுத்து ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ை) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைச் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டிய காணியை பெற்றுக்கொள்ளுதலினை உள்ளடக்கிய துணைச் சேவைகள் பெறுகை நிறுவனத்தினால் நிறைவேற்றப்படாமையின் காரணமாக 60 காவல் நிலையங்களில் 29 நிலையங்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாது கைவிடப்பட்டிருந்தது. | வன சீவராசிகள் திணைக்களத்தின் மூலம் ஒப்பந்தம் வழங்குதல் இடம் பெற்றதுடன் பெறுகை நடைமுறை மாத்திரம் இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ைை) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைக்கான கால அட்டவணை மற்றும் வேலைத் திட்டத்தை கேள்விதாரரிடமிருந்து பெற்று அங்கீகரித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆகக் குறைந்த கேள்வி மனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு இந்த வழங்கலை ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு தாமதம் ஏற்படுமாயின் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலம் ஆண்டின் இறுதியில் நிதி ஏற்பாடு வழங்கப்படுவதனால் கால அட்டவணையைத் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | தயாரிப்பதற்கு முடியாதிருந்ததுடன் இதன் பின்னர் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொண்டுள்ளேன். | |
| (ஆ) | சௌபாக்கிய உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 600 பெயர்ப் பலகைகளைத் தயாரிப்பதற்கு ரூபா 1,177,200 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடைமுறையின் போது தகமை பெற்ற ஆகக்குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்த கேள்வி மனுதாரருக்கு உரிய கேள்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அவரின் விருப்பமில்லாது அந்த விலைகளை விட உயர்ந்த விலைகளைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஆகக்குறைந்த கேள்விதாரின் விலைகளின் கீழ் கேள்விகள் வழங்கப்பட்டிருந்தன. இத்தீர்மானத்தின் மூலம் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1.(ஈ) பந்தியின் பிரகாரம் தகமைபெற்ற ஆர்வம் காட்டிய தரப்பினர்களுக்கு சமமான மற்றும் உச்சஅளவு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற பெறுகை நடைமுறைக்குரிய அடிப்படைத் தத்துவம் மீறப்பட்டிருந்தது. | ஏனைய ஒரு நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கு போதியளவு காலம் இல்லாததனால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. | |
| (இ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2 இலட்சம் குடும்பங்களை | உரிய நிறுவனம் வேண்டிக் கொண்ட ஆவணங்கள் | அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன் வழங்கும் வகையில் |

| | | |
|---|---|---|
| மேம்படுத்துவதற்காக 3 வகைகளைச் சார்ந்த 630 தண்ணீர் மோட்டார்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடைமுறையின் போது தகமைபெற்ற ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த கேள்விதாரர் கேள்வி ஆவணங்களின் மூலம் வேண்டிக் கொண்ட போதியளவான தகவல்களை சமர்ப்பித்திருந்தும் அதனை ஏற்றுக்கொள்ளாது அக்கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டு அதிக விலைகளுக்கு கேள்வியை வழங்கியமையின் காரணமாக ரூபா 5,608,700 நட்டம் ஏற்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் அவரின் கேள்வி நிராகரிக்கப்பட்டது. | பெறுகை நடவடிக்கையின் போது தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். |

3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

......................................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | மாவட்ட செயலகத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .............................. | ........................... | ....................... |
| (அ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதவாச்சி செயலகப் பிரிவில் அமுல்ப்படுத்தப்பட்ட ‘‘நாட்டுக் கோழி’’ வளர்ப்பு செயற்திட்டத்திற்காக தயாரித்த மாவடட்ட செயலக்தினால் அங்கீகரித்த செயற்திட்ட அறிக்கையில் செயற்திட்டத்திற்கு தேவையான நிர்மாணப் பொருட்கள் நியமத்திற்குப் பொருள் விபரக் குறிப்பிற்கும் உள்ளடக்கப்படாமை மற்றும் | கொள்வனவு செய்யப்படவேண்டிய பொருட்களின் தரம் தொடர்பாக பிரதேச செயலகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தரால் வாய்மொழி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததுடன் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பிரதேச செயலகத்தில் எந்த உத்தியோகத்தரும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யவேண்டிய பொருட்களின் பொருள் விபரக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டு உரிய பெறுகை நடவடிக்கையை மேற்கொள்கின்ற தரப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டியதுடன் அவ்வாறு செய்யாமையின் காரணமாக |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்ட செயலகத்தால் அல்லது பிரதேச செயலகத்தினால் தேவையான பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. அதன் காரணமாக செயற்திட்டத்திற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் போது நலன் பெறுனர்களுக்கு வழங்கப்படுகின்ற அரசாங்கத்தின் பங்களிப்புப் பணத்தை வெளிதரப்பினர்கள் தலையிட்டு பெற்றுக்கொண்டு குறைந்த தரமான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 1,514,700 பணம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை முறையான விசாரணைகளை மேற்கொண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1907 இன் 16 ஆம் இலக்க வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின் பிரகாரம் காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2009 மே 06 ஆந் திகதிய 1600∴18 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் பிரதேச செயலாளரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க காணிகளில் வணிக பொருட்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்வதற்காக வர்த்தமானியில் குறிப்பிட்ட அளவிற்கு அரசாங்க கட்டணம் அறவிடப்படுதல் | காணி ஆணையாளர் நாயகத்தின் எல்∴2∴1∴79 கருங்கல் இலக்க 2021 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிவாரண காலத்திற்கு உட்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தை விசாரித்து வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டவாறு கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். அனுராதபுரம் மாவட்டத்தில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் பேணப்படுகின்ற கருங்கல் வேலைத்தளங்களிலிருந்து புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தால் வழங்கப்பட்ட கருங்கற்கள் அகழ்தல் உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிட்ட கல் கியூப் அளவினை குறைத்து கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் கட்டண வருமானம் ரூபா 93,351,257 அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டுகளுக்காக இவ்விடயத்திற்குரிய அரசாங்கத்தின் நிலுவைக் கட்டணம் ரூபா 395 மில்லியனும் அறவிடவேண்டியிருந்தது. | | |
| (இ) | மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயகங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட மகளிர் பணியக கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடன் தவணைப் பணங்களை அறவிடாத செயற்பாடற்ற கடன் ரூபா 4,067,489 மொத்த தொகையாகும். கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக கிடைத்துள்ள நிதி ஏற்பாட்டில் 9 பிரதேச செயலகங்களின் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கடன் நிகழ்ச்சித் திட்டங்களில் காணப்பட்ட பலவீனங்களை இனங்கண்டு மீண்டும் மீளாய்வு செய்து கடன் நிகழ்ச்சித் திட்டத்தை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக அமைச்சு செயலாலளருக்கு தெரிவித்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அதற்கிணங்க கிடைக்கின்ற | கடன் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக காணப்படுகின்ற பலவீனங்களை இனங்கண்டு அதனை மீளாய்வு செய்து மீண்டும் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விதவைகள் கடன் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கால்நடை கடன் நிகழ்ச்சித்திட்டம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அக்கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சுழற்சி கடன் நிதியங்களிலிருந்து ரூபா 4,008,456 தொகை வங்கி கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டது. | ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஈ) | நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளிலிருந்து 17 பிரதேச செயலகப் பிரிவுகளால்மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 394,575,735 தொகையான நிலுவை குத்தகை அறவிடப்படவேண்டியிருந்தது. | நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கு பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றன. | காணி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனையைப் பெற்று அதற்கிணங்க நீண்ட கால குத்தகை உத்தரவுப் பத்திரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வதிவிட நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பதிரங்களுக்குரியவர்களால் பல்வேறு கம்பனிகளுக்கு ஒலி பரப்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக அக்காணிகளில் ஒரு பகுதி வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள 102 தொடர்பாடல் கோபுரங்கள் | சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2020 சனவரி 06 ஆந் திகதிய 2020.˙.02 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் “ காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் பின்தொடர் நடவடிக்கை என்ற தலைப்பிலான” சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அனுமதிப் பத்திரங்களை அரசாங்கம் பெறுப்பேற்று |

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமாக மேலே கூறப்பட்ட கூற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மேலே கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஐஐ ஆம் பகுதியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அதிமேதகு சனாதிபதி அவர்களால் கையொப்பமிட்டு 3 பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த 380 அனுமதிப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு அதற்குரீய நபர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லைை ல. | கிராம உத்ததயோகத்தர்கள் மூலம் உரிய உரித்தாளர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நலன்பெறுனர்களுக்குத் தெரியப்படுத்தி பதிவுசெய்து உரிய நலன் பெறுனர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைக எடுத்தல் வேண்டும். |